1972 மார்ச் 6]

அரசு அச்சகத்தில் மிகுநேர வேலை

* 316 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அரசினர் அச்சகத்தில் தொழிலாளர்கள் "Over Time" வேலை செய்வது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இல்லை. சென்னை அரசினர் அச்சகத்தில் தொழிலாளர்கள் மிகு நேர வேலை செய்வது தற்போது நிறுத்தி வைக்கப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னையில் இருக்கக்கூடிய இந்த அரசினர் அச்சகத்தை விரிவுபடுத்தவேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கைகள் வந்துகொண்டே இருக்கின்றன. அந்நிலையில் இன்று பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு ஓவர் டைம் கொடுப்பதற்குப் பதிலாக புதிதாக ஊழியர்களை இணைத்து வேலை செய்வது உதவியாக இருக்குமல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை இப்போது பரிசிலனையில் இருந்துவருகிறது. அதற்கான முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது.

Huts damaged in Udumalpet

* 317 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that 400 huts in Udumalpet were washed away due to heavy floods on 27—10—1971; and

(b) if so, the relief measures taken by the Government?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) பெருத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் 26-10-1971 அன்று இரவு உடுமலைப்பேட்டை தாலுகாவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் 161 குடிசைகள் சேதமடைந்தன.

(இ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூ. 4,850 வழங்கப்பட்டது.